**மாகாணக் கல்வித் திணைக்களம் – வடமாகாணம்**

**க. பொ. த. (உயர்தர)ப் பரீட்சை – 2017**

# நாடகமும் அரங்கியலும் - I

| தரம் - 13 (2017) | 58 T I | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

**சுட்டெண் :............................**

| பகுதி - I மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

**அறிவுறுத்தல்கள்:**

- ✶ பகுதி I இலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், பகுதி II இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.
- ✶ பகுதி II இல் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி - I

- ❖ எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.
- ❖ 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறியினுள் எழுதுக.

01) "நாடகம் என்பது வாழ்க்கையின் ஒரு துண்டம்" என்ற கருத்தைக் கூறியவர்
(1) இளம்பூரணர் (2) பேர்ணாட்ஷா (3) அரிஸ்ரோட்டில்
(4) தொம்சன் (5) அலடைஸ் நிக்கொல் (.........)

02) தாளலயப்பட்ட ஆடலாகக் கொள்ளப்படுவது
(1) நிருத்த (2) நிருத்திய (3) நாட்டிய
(4) ஆங்கீகம் (5) சாத்வீகம் (.........)

03) 16 ஆம் நூற்றாண்டில் இத்தாலியிலும் பிரான்சிலும் தோன்றிய அரங்க வடிவம்
(1) ஒபேறா (2) இசைநாடகம் (3) நடன நாடகம்
(4) கூத்து (5) பலே (.........)

04) நிருத்த, நிருத்திய, நாட்டிய என்பதில் நிருத்திய என்பதன் பொருள்
(1) தூய நடனமாகும்.
(2) தனியானதொரு நாடகமாகும்.
(3) லயத்திற்கு அமைவான உடலசைவாகும்.
(4) ஆங்கீக, சாத்வீக, அபிநயம் என்பவற்றின் வழியாக யாதேனும் ஒரு பாவத்தை வெளிப்படுத்தல் ஆகும்.
(5) கதை தழுவி வரும் கூத்தாகும். (.........)

05) வேட உடை, ஒப்பனை என்பவற்றுடன் தொடர்புடைய அபிநயம்
(1) சாத்வீகம் (2) ஆஹார்யம் (3) வாச்சீகம்
(4) ஆங்கீகம் (5) பிந்து (.........)

06) சாத்வீக அபிநயத்தில் வரும் பிரளய என்பதன் பொருள்
(1) உடலின் நிறம் மாறுதல்.
(2) உடல் நடுங்குதல்.
(3) குரல் மாற்றம்.
(4) வியர்த்தல்.
(5) மயக்கம். (.........)

07) சமஸ்கிருத அரங்கின் கதைப்பின்னலில் தனக்குப் பயன் ஏதுமின்றி தலைவனின் விருப்பத்துக்காகப் பாடுபடுவதாகக் கற்பனை செய்யப்படும் வரலாறு
(1) பிஜ (2) கார்ய (3) பிந்து
(4) பதாக (5) பிரகரி (.........)

08) கதாநாயகனின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறுமா இல்லையா எனும் ஆவல் மேலிடுகின்ற அந்தர நிலையைக் குறிக்கும் கதைப்பின்னலின் சந்தர்ப்பமாக அமைவது
(1) ஆரம்ப (2) நியதாப்தி (3) பலாகம்
(4) பிராப்தியாய (5) பிரயத்தன (.........)

09) ஊமம் முதலில் தோற்றம் பெற்ற நாடு
(1) கிரேக்கம் (2) உரோம் (3) இந்தியா
(4) சீனா (5) யப்பான் (.........)

10) தொவில் சடங்குடன் சமமாக வைத்துப் பேசத்தக்க தமிழ்ச் சடங்கு
(1) கோயிற் சடங்கு.
(2) கழிப்பு சடங்கு.
(3) சூரன்போர்.
(4) மானம்புத் திருவிழா.
(5) வேட்டைத் திருவிழா. (.........)

11) அரங்கேற்று காதையில் மாதவி ஆடிய ஆடல்களின் எண்ணிக்கை
(1) ஆறு (2) பதினொன்று (3) எட்டு
(4) பன்னிரண்டு (5) நான்கு (.........)

12) லோகதர்மி, நாட்டியதர்மி எனும் அவைக்காற்றுகைப் பாணிகளை முதலில் குறிப்பிடும் நூல்
(1) தசரூபகம்.
(2) சிலப்பதிகாரம்.
(3) கவிதையியல்.
(4) நாட்டிய சாஸ்திரம்.
(5) தொல்காப்பியம். (.........)

13) நாட்டிய சாஸ்திர அரங்கில் குறிப்பிடப்படும் விக்கிரஸ்ர என்பது
(1) வட்ட அரங்கு.
(2) முக்கோண அரங்கு.
(3) செவ்வக அரங்கு.
(4) துருத்த அரங்கு.
(5) சதுர அரங்கு. (.........)

14) கொமடியா டெல் ஆர்த்தே என்ற நாடகம் எந்நாட்டிற்குரியது?

(1) பிரான்ஸ் (2) இத்தாலி (3) கிரேக்கம்

(4) உரோம் (5) இங்கிலாந்து (.........)

15) இயற்பண்பு வாதத்தின் தந்தை எனப்படுபவர்

(1) எமிலிசோலா.

(2) ஹென்றிக் இப்சன்.

(3) ஹென்றி பெக்.

(4) அலெக்சாண்டர் டூமா.

(5) அன்ரோ அன்ரோயின். (.........)

16) யதார்த்த வாத நாடகமோடியின் முன்னோடியாகக் கருதப்படுபவர்

(1) அன்ரன் செக்கோவ்.

(2) ஹென்றிக் இப்சன்.

(3) அலெக்சாண்டர் டூமா.

(4) ஹென்றி பெக்.

(5) எமிலிசோலா. (.........)

17) குளுர்த்திச் சடங்கு நடத்தப்படும் மாதம்

(1) தை (2) பங்குனி (3) மாசி

(4) சித்திரை (5) வைகாசி (.........)

18) 'சேடியாட்டம்' என அழைக்கப்படும் கூத்து

(1) காமன் கூத்து.

(2) நாட்டைக் கூத்து.

(3) பொன்னர் சங்கர்.

(4) மகிடிக் கூத்து.

(5) கோவலன் கூத்து. (.........)

19) அன்னத் தடாகம் (Swan Lake) என்னும் ஆற்றுகை எவ்வகை சார்ந்தது?

(1) ஒபேறா.

(2) நடன நாடகம்.

(3) இசை நாடகம்.

(4) பலே.

(5) கபுக்கி நாடகம். (.........)

20) இலங்கைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில நாடகக் கழகத்தை ஸ்தாபித்தவர்

(1) பேராசிரியர் எதிர்வீரசரச்சந்திரா.

(2) E. F. C. லுடோவைக்.

(3) ஜோன் டி சில்வா.

(4) சாள்ஸ் டயஸ்.

(5) சாள்ஸ் அபேசேகர. (.........)

The National e-learning Portal for The General Education

21) நாடகத்தை மேடையில் வியாக்கியானிப்பது எவ்வாறழைக்கப்படும்?
(1) நெறியாள்கை.
(2) தயாரிப்பு.
(3) மேடை முகாமைத்துவம்.
(4) அரங்கத் தொழிநுட்பம்.
(5) ஒளியூட்டல். (.........)

22) மனோரதிய வாத நாடகமோடியின் பண்பு அல்லாதது
(1) கற்பனைக்கு முக்கியத்துவம் அளிப்பது.
(2) காரணகாரியத் தொடர்புக்கு முதன்மை வழங்குவது.
(3) இயற்கையின் அழகு, காதலின் சிறப்புப் பற்றிக் கூறுவது.
(4) அறிவாற்றலிலும் பார்க்க உணர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுப்பது.
(5) நல்லது - கெட்டது, கறுப்பு - வெள்ளை போன்ற பாத்திரச் சித்தரிப்புக்களைக் குறிப்பது. (.........)

23) மரபுவழிக் கூத்தில் ‘சட்டம் கொடுத்தல்’ என்பது
(1) பாத்திரத் தெரிவு.
(2) ஒத்திகை பார்த்தல்.
(3) சலங்கை அணிதல்.
(4) அளிக்கை செய்தல்.
(5) வெள்ளுடுப்பு ஒத்திகை. (.........)

24) தொழிநுட்ப சாதனப் பயன்பாட்டுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கும் கலை வடிவம்
(1) நாடகம் (2) நடனம் (3) இசை
(4) சிற்பம் (5) சினிமா (.........)

25) வாசிப்பின் மூலம் நுகரப்படும் கலைவடிவம்
(1) தொலைக்காட்சி நாடகம்.
(2) வானொலி நாடகம்.
(3) சிறுகதை.
(4) நாடகம்.
(5) இசை. (.........)

26) படச்சட்ட மேடையின் பின்புறத்தே காணப்படும் திரை
(1) வான்திரை (2) முன்திரை (3) பக்கத்திரை
(4) குறுக்குத்திரை (5) மேற்திரை (.........)

27) ஜப்பானிய நோ அரங்கில் பாலப்பாதையை எவ்வாறு அழைப்பர்?
(1) கசிக்ககாறி (2) கனாமிச்சி (3) பூம்பாதை
(4) ஷத்தே (5) வகி (.........)

28) நாடகமொன்றில் இசையின் பிரதான பயன்பாடு எனக் கருத முடியாதது
(1) நாடகத்தின் பின்னணியைக் காட்டும்.
(2) நாடகத்தின் உணர்வு நிலையைக் காட்டும்.
(3) நாடகத்தின் காலம், நேரம் என்பவற்றை வெளிப்படுத்தும்.
(4) நாடகத்தின் சூழமைவைக் காட்டும்.
(5) பாத்திரங்களின் அழகு நிலையைக் காட்டும். (.........)

29) மோடிமைப்பாணி நாடக மரபில் வேட உடையின் இயல்பு அல்லாதது

(1) பகட்டு, ஆடம்பரம் நிறைந்தது.

(2) முத்துக்கள், மணிகள் பதிக்கப்பட்டது.

(3) குறியீட்டுப் பங்கானது.

(4) வாழ்வை மிக ஒத்ததாகக் காணப்படும்.

(5) பாத்திரங்கள் யாவும் ஒரே தன்மையான உடையை அணியும். (.........)

30) அரங்கில் ஒளியின் செறிவைக் கூட்டிக் குறைக்கப் பயன்படுத்தும் கருவி

(1) பரப்பொளி.

(2) பொட்டொளி.

(3) மங்கலாக்கி.

(4) கீற்றொளி.

(5) வர்ணச் சக்கரம். (.........)

31) நாடகத்தில் காட்சி விதானிப்பு செய்யப்படுவதன் நோக்கம் அல்லாதது

(1) நாடகத்தை அழகியல் தன்மையுடையதாக்கல்.

(2) நாடகத்தின் கதை, களம் என்பவற்றைப் பிரதிபலித்தல்.

(3) கரு, மனநிலை, மோடி என்பவற்றை வெளிப்படுத்தல்.

(4) பாத்திர அசைவியக்கத்தை ஒழுங்குபடுத்தல்.

(5) பாத்திரத்தின் பௌதிகப் பண்பை வெளிப்படுத்தல். (.........)

32) யதார்த்த நாடக மோடியின் ஒப்பனை பெரும்பாலும்

(1) மிகைப்படுத்தப்பட்டதாய் இருக்கும்.

(2) குறியீட்டுப் பாங்கானதாயிருக்கும்.

(3) இயல்பு நிலையானதாய் இருக்கும்.

(4) பகட்டு, ஆடம்பரம் மிக்கதாய் அமையும்.

(5) மோடிமைப் பண்பு கொண்டதாய் இருக்கும். (.........)

33) சிலப்பதிகாரத்தில் கூறப்பட்ட பொதுவியல் அரங்கு என்பது

(1) அரச சபையில் ஆடப்படுவது.

(2) செந்நெறிப்படுத்தப்பட்டது.

(3) உயர் மரபுக்குரியது.

(4) விதிமுறைப்படுத்தப்பட்டது.

(5) அடிநிலை மக்களுக்குரியது. (.........)

34) வேளாண்மைத் தொழிலோடு தொடர்புடைய கூத்து வடிவம்

(1) வடமோடி

(2) தென்மோடி

(3) வசந்தன் கூத்து

(4) மகிடிக் கூத்து

(5) கோவலன் கூத்து (.........)

35) யப்பானிய மரபில் விகடப் பண்புடைய நாடக வடிவம்

(1) கியோஜின் (2) புன்றகு (3) கொவாக்கா

(4) நோ (5) கபுக்கி (.........)


36) கதாசிஸ் எனப்படும் உணர்ச்சி வெளிக்கொணர்கையில் இடம்பெறும் பிரதான உணர்ச்சிகள்
   (1) பயமும் கழிவிரக்கமும்.
   (2) பரிவும் கழிவிரக்கமும்.
   (3) கழிவிரக்கமும் சோகமும்.
   (4) பயமும் வியப்பும்.
   (5) கழிவிரக்கமும் கோபமும். (.........)

37) படத்திலுள்ள ஆற்றுகை வடிவம் குறித்து நிற்பது



   (1) ஒபேரா.
   (2) பலே.
   (3) நோ.
   (4) கபுக்கி.
   (5) கொவாக்கா. (.........)

38) படத்தில் குறிப்பிடப் பெற்றுள்ள அரங்க வெளி




   (1) புறொசீனியம் அரங்கு.
   (2) கிரேக்க அரங்கு.
   (3) உரோம அரங்கு.
   (4) மத்தியகால அரங்கு.
   (5) எலிசபெத் அரங்கு. (.........)

39) படத்தில் காட்டப்பட்டுள்ள உடற் பொறிமுறை அரங்கைத் தோற்றுவித்த அரங்கவியலாளர்



   (1) மேயர் கோல்ட்.
   (2) றிச்சட் செக்னர்.
   (3) பீற்றர் புறூக்.
   (4) கோடன் கிறேக்.
   (5) அடோல்ப் அப்பியா. (.........)

40) படத்தில் காட்டப்பெற்றுள்ள அரங்கவியலாளரினால் தோற்றுவிக்கப்பெற்ற அரங்க வகை



   (1) காவிய அரங்கு.
   (2) வறுமை அரங்கு.
   (3) சூழலியல் அரங்கு.
   (4) குரூர அரங்கு.
   (5) தளைநீக்க அரங்கு. (.........)

## பகுதி - II

❖ **பிரிவு A இலிருந்து இரண்டு வினாக்களுக்கும் பிரிவு B இலிருந்து இரண்டு வினாக்களுக்குமாக மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

### பிரிவு A

01) 1) ஆற்றுகைக் கலை என்றால் என்ன? (2 புள்ளி)
2) ஆற்றுகைக் கலையின் பிரதான பண்புகள் நான்கைக் கூறி விளக்குக. (4 புள்ளி)
3) நாடகம் ஏனைய கலைகளான தொலைக்காட்சி நாடகம், வானொலி நாடகம், சினிமா என்பவற்றிலிருந்து வேறுபடுமாற்றை விளக்குக. (9 புள்ளி)

02) 1) திறஜெடி நாடக எண்ணக்கரு பற்றி அரிஸ்ரோட்டிலால் எழுதப்பட்ட நூலின் பெயர் யாது? (2 புள்ளி)
2) அரிஸ்ரோட்டிலால் குறிப்பிடப்பட்ட திறஜெடியின் ஆக்கக் கூறுகளைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளி)
3) திறஜெடி நாடகத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றி விளக்குக. (7 புள்ளி)

03) பின்வரும் அரங்க வெளிகளின் ஆற்றுகை முறை பற்றி விளக்குக.
1) படச்சட்ட அரங்கு.
2) வட்டக்களரி.
3) அர்ச்சுனன் தபசு. (3 × 5 = 15 புள்ளி)

### பிரிவு B

**(எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக)**

04) 1) நாட்டிய சாஸ்திரம் கூறும் இரு வகையான தர்மிகளும் எவை? (2 புள்ளி)
2) நிருத்த, நிருத்திய, நாட்டிய என்பன பற்றி விளக்குக. (6 புள்ளி)
3) மார்க்க, தேசி அரங்க மரபுகளுக்கிடையிலான வேறுபாடுகளைக் குறிப்பிட்டு விளக்குக. (7 புள்ளி)

05) பின்வரும் அரங்கவியலாளர்களால் முன்வைக்கப்பட்ட நடிப்புக் கோட்பாடுகளையும் அவை அரங்கில் ஏற்படுத்திய மாற்றங்களையும் தருக.
1) ஸ்ரனிஸ்லவஸ்கி.
2) போட்டோல் பிறெ.ஃ.ற்.
3) ஒகஸ்தா போல். (3 × 5 = 15 புள்ளி)

06) பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்குச் சிறுகுறிப்பு வரைக.
1) சன்னியகும.
2) சொக்கரி.
3) பாஸ்க்கு.
4) பறைமேளக்கூத்து. (3 × 5 = 15 புள்ளி)

| | | |
|---|---|---|
| | **மாகாணக் கல்வித் திணைக்களம் – வடமாகாணம்**<br>**க. பொ. த. (உயர்தர)ப் பரீட்சை – 2017**<br>**நாடகமும் அரங்கியலும் - II** | |
| **தரம் - 13 (2017)** | **58 T II** | **மூன்று மணித்தியாலங்கள்** |

**சுட்டெண் :............................**

| | |
|---|---|
| **பகுதி - I**<br>**மொத்தப் புள்ளிகள்** | |

**அறிவுறுத்தல்கள்:**

- ✶ **பகுதி I இலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், பகுதி II இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.**
- ✶ **பகுதி II இல் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி - I

- ❖ **எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.**
- ❖ ***1* தொடக்கம் *40* வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறியினுள் எழுதுக.**

01) "எமிலிசோலா" எந்த நாட்டு நாடக ஆசிரியர்

(1) ஜேர்மன் (2) பிரான்ஸ் (3) ரஷ்யா
(4) போலந்து (5) அமெரிக்கா (.........)

02) அன்ரிக்கனி நாடகத்தின் தோற்ற மூலமாக அமைந்தது

(1) இலியட் (2) ஒடிசி
(3) தீபிய புராணம் (4) சமூக நம்பிக்கைக் கதைகள்
(5) கோடகீஸ் (.........)

03) முதன் முதலில் வேடமுகத்தைப் பயன்படுத்திய அரங்க மரபு

(1) சமஸ்கிருத அரங்கு.
(2) எலிசபெத்கால அரங்கு.
(3) ஜப்பானிய அரங்கு.
(4) கிரேக்க அரங்கு.
(5) சீன அரங்கு. (.........)

04) பத்தினித் தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடைய சிங்களச் சடங்கு அரங்கு

(1) றட்டயக்கும (2) பலி (3) கொஹொம்பகங்காரிய
(4) சன்னியக்கும (5) சொக்கரி (.........)

05) கிறிஸ்தவக் கதைக் கருக்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பெற்ற சிங்கள நாடக வடிவம் எது?

(1) நூர்தி (2) மனமே (3) நாடகம
(4) கோலம் (5) சொக்கரி (.........)

06) பின்வருவனவற்றில் சோபோக்கிளிஸ்சின் திறஜெடி நாடகம் அல்லாதது

(1) அஜெக்ஸ் (2) அன்ரிக்கனி (3) எலக்ரா

(4) ஈடிப்பஸ் மன்னன் (5) திறக்ஸ் (.........)

07) கிரேக்க கொமடியில் சமூகவியல் விடயங்களை வெளிக்கொண்டு வந்தவர்

(1) அரிஸ்ரோப்பென்ஸ் (2) மெனாண்டர் (3) புரூட்டஸ்

(4) ரெரன்ஸ் (5) மோலியர் (.........)

08) சமஸ்கிருத அரங்கில் ''ரங்கபிதா'' என்பது

(1) பார்ப்போர் பகுதி.

(2) பிரதான நடிப்பிடம்.

(3) இசைஞர் பகுதி.

(4) ஒப்பனை அறை.

(5) வரவுப் பகுதி. (.........)

09) நடிகருக்கான பயிற்சிகளில் மெய்வன்மை, ஜிம்னாஸ்ரிக் போன்றவற்றைப் பயன்படுத்தியவர்

(1) பேட்டோல் பிறெக்ற்.

(2) சாமுவேல் பெக்கற்.

(3) மேயர் ஹோல்ட்.

(4) றிச்சேட் செக்னர்.

(5) ஒகஸ்தா போல். (.........)

10) பின்வருவனவற்றுள் சேக்ஸ்பியரின் மகிழ்நெறி நாடகமாக அமைவது

(1) ரோமியோ அன் ஜீலியட் (2) ஹம்லெட்

(3) கிங்கிலியர் (4) வெனிஸ்நகர வணிகன்

(5) கோரியோவனஸ் (.........)

11) ஜீலிய சீசர் நாடகத்தில் மக்கள் புரட்சிக்குக் காரணமாக அமைந்தது

(1) நிமித்திகனின் எதிர்வுகூறல்.

(2) காஷியஸ்சின் சூழ்ச்சி.

(3) சீசரின் கொலை.

(4) மார்க் அன்ரனியின் உரை.

(5) அதிகார மாற்றம். (.........)

12) அன்ரிக்கனி நாடகத்தில் இடம்பெறுகின்ற முரண் பாத்திரச் சோடி அல்லாதது

(1) அன்ரிக்கனி - இசுமெனி

(2) அன்ரிக்கனி - கிரயன்

(3) தெய்ரீசியஸ் - கிரயன்

(4) அன்ரிக்கனி - ஏமன்

(5) ஏமன் - கிரயன் (.........)

13) அபிஞ்ஞான சாகுந்தலத்தில் மோதுகை நிலை தோன்றுவதற்குக் காரணமான பாத்திரம் எது?

(1) கண்ணுவர் (2) துர்வாச முனிவர் (3) கௌதமி

(4) செம்படவன் (5) காசிபர் (.........)

14) பிரபான்சியோவை ஓதல்லோவிற்கு எதிராகத் தூண்டிவிடுவதற்கு இயாகோவும் ரோடரிக்கோவும் திட்டமிடும் களமாக அமைவது

(1) தெரு (2) ஆலோசனை மண்டபம்
(3) கோட்டை (4) துறைமுகம்
(5) பிரான்சியோவின் வீடு (.........)

15) "தோழி! நம்முடைய துயரத்தை எப்படியாவது நீக்கிக் கொள்வோம். பேதையான அவள் எப்படியாவது இன்ப மெய்தட்டும்....." இவ் உரையாடலில் வெளிப்படும் ரசம்

(1) கருணாரசம் (2) சிருங்காரம் (3) ரௌத்திரம்
(4) அற்புத (5) ஹாஸ்யம் (.........)

16) அன்ரிக்கனி நாடகத்தில் ஒரே சந்தர்ப்பத்தில் பங்கேற்கும் மூன்று பாத்திரங்களின் தொகுதி

(1) அன்ரிக்கனி, இசுமெனி, ஏமன்.
(2) கிரயன், இயூரிடிசி, ஏமன்.
(3) அன்ரிக்கனி, இசுமெனி, தெய்ரீசியஸ்.
(4) கியூரிடிசி, தூதன், கிரயன்.
(5) அன்ரிக்கனி, இசுமெனி, கிரயன். (.........)

17) "புலசந்தோர்" எனும் பாத்திரம் இடம்பெறும் நாடக மரபு

(1) வடபாங்கு (2) வடமோடி (3) வாசாப்பு
(4) விலாசம் (5) சபா நாடகம் (.........)

18) பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திரவினால் ஸ்தாபிக்கப்பெற்ற நாடக மன்றம் எது?

(1) சிங்கள நாடக சபை (2) ஜனகரலிய
(3) அபினா கலைக்குழு (4) ரவர்ஹோல்
(5) விபுலறங்கசபா (.........)

19) பின்வருவனவற்றுள் "பா" நாடகத் தொகுதியாக அமைவது

(1) கசிப்பு, மானுடம் சுடரும் ஓர் விடுதலை.
(2) கோடை, நாட்டவன் நகர வாழ்க்கை.
(3) அற்றைத் திங்கள், மதமாற்றம்.
(4) புதியதொரு வீடு, கடூழியம்.
(5) பொருளோ பொருள், முற்றிற்று. (.........)

20) மனோரதியவாதம் பிரபல்யம் பெற்ற நாடுகள்

(1) சீனா, ஜப்பான். (2) ரஷ்யா, தென்னாபிரிக்கா.
(3) ஜேர்மன், பிரான்ஸ். (4) இங்கிலாந்து, ரஷ்யா.
(5) இந்தியா, ஜேர்மன். (.........)

21) "கதிரைப் பூசை" இடம்பெறும் கூத்து வடிவம்

(1) நாட்டைக் கூத்து (2) முல்லைமோடி
(3) குடமூதற் கூத்து (4) பறைமேளக் கூத்து
(5) மகிடிக் கூத்து (.........)



The National e-learning Portal for The General Education

22) சர்வதேசக் கலைஞர்களுடன் க. சிதம்பரநாதன் பங்கு கொண்ட சர்வதேசக் கலைப் பயணம்

(1) நாராய் நாராய் (2) வடலிக்கூத்தர் (3) ஆசியாவின் ஓலம்
(4) கலைப்பாலம் (5) கலைப் பயணம் (.........)

23) அண்மையில் அமரத்துவம் அடைந்த A. J. குணசேகரனின் நாடக குழு

(1) திஜநாடக இயக்கம். (2) ஆழி நாடக இயக்கம்.
(3) பல்கலை அரங்கம். (4) கூத்துப் பட்டறை.
(5) தன்னானே கலைக்குழு. (.........)

24) "கலங்காமல் நிலங்காக்கும் அதிவீர சூரதுரை கருணையாலே" எனும் வரவு விருத்தத்திற்குரிய பாத்திரம்

(1) அலங்காரரூபன் (2) செகதனையாளி (3) வளையல் செட்டி
(4) அதிவீரசூரன் (5) அலங்காரரூபி (.........)

25) "ஓ அரசனே" அந்த மான் இவ்வாச்சிரமத்திற்கு உரியது அது கொல்லப்படுதல் ஆகாது............" இக்கூற்று ஒரு

(1) தனிமொழி ஆகும். (2) அகமொழி ஆகும்.
(3) ஆகாயக் கிளத்தல் ஆகும். (4) சொல்லாடல் ஆகும்.
(5) புறச்சொல்லாகும். (.........)

26) பின்வரும் பண்புகளைக் கொண்ட நாடக மரபு

- ✶ கொட்டகை மரபுகள் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ✶ கர்நாடக இசையைக் கொண்டது.
- ✶ பாடலை அரங்காகக் கொண்டது.
- ✶ ஊட்டு வசனங்களைக் கொண்டது.

(1) தெருக்கூத்து (2) பள்ளு (3) கீர்த்தனை
(4) ஸ்பெசல் நாடகம் (5) ரசலீலா (.........)

27) அண்மையில் மக்கள் களரியினால் தயாரிக்கப்பட்ட "வெண்கட்டி வட்டம்" எனும் நாடகத்தை நெறியாள்கை செய்தவர்

(1) தர்மஸ்ரீ பண்டாரநாயக்க. (2) பராக்கிரம நிரியல்ல.
(3) அனோஜா வீரசிங்க. (4) பத்திராஜ.
(5) ஜெரொம் த. சில்வா. (.........)

28) சேக்ஸ்பியரின் நாடகம் அதிகம் மேடையேற்றப்பட்ட அரங்கு

(1) த போர்ச்சுன் (2) த ரோஸ் (3) த கேட்டீன்
(4) த சுவான் (5) த குளோப் (.........)

29) அன்ரிக்கனி, நோறா, டெஸ்ரிமோனா ஆகிய மூன்று பாத்திரங்களுக்கும் பொதுவாக அமைந்த பண்பு

(1) அவர்கள் அரச அதிகாரத்தால் நசுக்கப்பட்டவர்கள்.
(2) ஆணாதிக்கத்துக்குப் பலியானவர்கள்.
(3) தற்துணிவுடன் தீர்மானம் எடுத்தவர்கள்.
(4) சமூகத்திற்கு அஞ்சியவர்கள்.
(5) மென்மையான இயல்புடையவர்கள். (.........)

30) காளிதாசரின் நாடகப் பாணியில் அடங்காதது

(1) அதீத வர்ணனைப் பண்பு.

(2) கவிதைப் பாங்கான உரையாடல்.

(3) வீரதீரப் பண்புகளைக் கொண்ட தலைமைப் பாத்திரம்.

(4) ஓரங்க நாடகமாக இருக்கும்.

(5) சிருங்கார சுவை மேலோங்கி நிற்கும். (.........)

31) பின்வரும் கூற்றுக்களில் கூத்தின் அழகியலைப் பிரதிபலிக்காத அம்சம்

(1) கூத்தர்கள் நிலபாவாடை விரித்து வரவேற்கப்பெறல்.

(2) அண்ணாவியார் சால்வை அணிவித்துக் கௌரவிக்கப்பெறல்.

(3) வட்டக்களரியில் பாரம்பரிய ஒளியூட்டல்.

(4) பல ஊர்களிலிருந்தும் பார்ப்போர் ஆற்றுகையைப் பார்க்க வருதல்.

(5) தனித்துவமான வேட உடை. (.........)

32) பின்வருவனவற்றுள் வேட்டுவ வரிக்குரிய பண்பாக அமைவது

(1) கற்கடகக் கை கோர்த்து ஆடுவதாகும்.

(2) சாலினித் தெய்வமாக அபிநயித்து ஆடுவது ஆகும்.

(3) வேலனைக் கேலி செய்து பாடி ஆடுவதாகும்.

(4) அவுணருடன் மற்போர் செய்து ஆடுவது ஆகும்.

(5) ஒரு புறத்தை மாத்திரம் அசைத்து ஆடும் ஆட்டம் ஆகும். (.........)

33) "நோ" நாடகங்களின் கோட்பாடுகள் தொடர்பாக கூறும் நூல் எது?

(1) புகிகதென் (2) கியோஜின் (3) நிங்யோஜொரூரி

(4) மொடோகிம் (5) கொக்கா (.........)

34) கபுக்கி மேடை அலங்காரத்தின் இலட்சணங்களாக அமையாதது

(1) பலவர்ணத் திரை பயன்படுத்தப்படல்.

(2) அரசமாளிகை, நதி போன்ற காட்சியமைப்புக்கள் அமைக்கப்பட்டிருத்தல்.

(3) மழை, பனிப் பெய்தல் போன்றன காண்பிக்கப் பெறுதல்.

(4) கனாமிச்சி எனும் பாதை.

(5) சுழல் மேடை. (.........)

35) நோ நாடகத்தின் பிரதான பண்புகள் தொடர்பாகப் பொருத்தமான கூற்றுக்களின் தொகுதி

(A) ஆடை அணிகள் மூலமாகப் பழைய சமூகத்தைக் காட்டுவது.

(B) கதைப்பொருள் நடந்து முடிந்த சம்பவத்துடன் தொடர்புபட்டிருத்தல்.

(C) உடல் அசைவுகளுக்குப் பல்வேறு பாணிகள் பயன்படுத்தப்பட்டமை.

(D) தத்துவ விளக்கங்களைச் சுருக்கமாகக் கூறுதல்.

(E) பாத்திரங்கள் தங்களைத் தாங்களே அறிமுகம் செய்தல்.

(1) A யும் C யும் (2) B யும் D யும் (3) D யும் E யும்


(4) A யும் E யும் (5) B யும் E யும் (.........)

36) இப்படத்தில் காட்டப்பட்டுள்ள நாடகவியலாளரின் பார்ப்போர் தொடர்பிலான சிந்தனையாக அமைவது



(1) பார்ப்போனே தான் எங்கு நிற்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கின்றான்.
(2) பார்ப்போர் நாடகத்துடன் ஒன்றித்தல் வேண்டும்.
(3) பார்ப்போர் நாடகத்தின் முடிவுகளைத் தீர்மானிக்க வேண்டும்.
(4) பார்ப்போர், பாத்திரங்களினது ஒவ்வொரு அசைவினதும் மருட்கைக்கு ஆட்படுகின்றனர்.
(5) நாடகத்தைப் பார்ப்பதன் மூலம் சிந்திக்கத் தொடங்க வேண்டும். (.........)

37) இப்படம் சுட்டும் அரங்க வெளி எப் பண்பாட்டுக்குரியது?



(1) கிரேக்கம்.
(2) உரோம்.
(3) எலிசபெத் காலம்.
(4) மத்திய காலம்.
(5) ஜப்பான். (.........)

38) இப்படம் சுட்டும் கூத்து வகை யாது?



(1) காமன் கூத்து
(2) பொன்னர் சங்கர்
(3) அர்ச்சுனன் தபசு
(4) தெருக் கூத்து
(5) கதகளி (.........)

39) இப்படத்தில் காட்டப்பெற்றுள்ள சி. மௌனகுருவினால் எழுதி நெறிப்படுத்தப்பெற்ற நாடகம்



(1) இராவணேசன்.
(2) உடையார் மிடுக்கு.
(3) சங்காரம்.
(4) சக்தி பிறக்குது.
(5) சரிபாதி. (.........)

40) இப்படத்தில் குறிப்பிடப்படும் வாத்தியக் கருவி



(1) கொம்பு.
(2) முகவீணை.
(3) யாழ்.
(4) ஜெண்டை.
(5) தம்புரா. (.........)

## பகுதி - II

❖ **பிரிவு A இலிருந்து இரண்டு வினாக்களுக்கும் பிரிவு B இலிருந்து இரண்டு வினாக்களுக்குமாக மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

### பிரிவு A

01) அ) அன்ரிக்கனி நாடகத்தின் பிரதான மோதுகை யாது? (2 புள்ளி)

ஆ) அன்ரிக்கனி நாடகத்தின் மோதுகையானது பாத்திர முரண் நிலைகளுக்கு ஊடாக எவ்விதம் வளர்த்துச் செல்லப் பெறுகின்றது? (6 புள்ளி)

இ) மேற்படி மோதுகையின் முடிவானது கிரயனை 'நலமார்ந்த ஒன்று பாழ்பட்டுப் போதல்' என்ற நிலைக்கு இட்டுச் செல்கிறது. இக்கூற்றின் பொருத்தப்பாட்டை எடுத்துக் கூறுக. (7 புள்ளி)

02) அ) ஒரு பாவையின் வீடு நாடகத்தில் வரும் ஹெல்மரை ஆணாதிக்க சிந்தனையின் பிரதிநிதியாகக் கொள்ள முடியுமா? உமது முடிவிற்கான நியாயப்பாட்டைத் தருக. (7 புள்ளி)

ஆ) நோறா வீட்டை விட்டு வெளியேறிச் செல்வதைப் பெண் விடுதலையின் அடையாளமாகக் கொள்ள முடியுமா? நியாயம் தருக. (8 புள்ளி)

03) ஷேக்ஸ்பியரின் நாடகப் பாத்திரங்கள் மானுடப் பண்புகளை நுணுக்கமாக வெளிப்படுத்துபவை ஆகும். ஒதெல்லோ நாடகத்தில் இடம்பெறுகின்ற

அ) ஒதெல்லோ. (5 புள்ளி)

ஆ) இயாகோ. (5 புள்ளி)

இ) டெஸ்டிமோனா. (5 புள்ளி)

ஆகிய பாத்திரங்களின் பண்புகளை ஆதாரமாகக் கொண்டு இக்கூற்றை விளக்குக.

### பிரிவு B

**(எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக)**

04) இலங்கையின் பிரதான தமிழ் நாடக மரபுகளான கூத்தையும், இசை நாடகத்தையும் பின்வரும் விடயங்களின் அடிப்படையில் ஒப்பிடுக.

அ) நடிப்பு முறை. (5 புள்ளி)

ஆ) அழகியல் தன்மை. (5 புள்ளி)

இ) ஆற்றுவோர் - பார்ப்போர் தொடர்பு. (5 புள்ளி)

05) பின்வருவோர் இலங்கையின் நவீன தமிழ் நாடக மரபில் ஏற்படுத்திய திரும்புமுனைக் குரிய பங்களிப்புக்களை விளக்குக.

அ) க. கணபதிப்பிள்ளை. (5 புள்ளி)

ஆ) நா. சுந்தரலிங்கம். (5 புள்ளி)

இ) சி. மௌனகுரு. (5 புள்ளி)

06) அ) தமிழகத்தில் 600 இற்கு முற்பட்ட காலத்தில் நிலவிய கரண நிலைப்பட்ட ஆடல்கள் யாவை? (3 புள்ளி)

ஆ) தமிழகத்தில் அடிநிலை மக்களின் அரங்கில் ஏற்பட்ட முக்கிய வளர்ச்சிப் போக்குகள் யாவை? (6 புள்ளி)

இ) தமிழகத்தில் உயர் குழாத்தினருக்குரிய அரங்கு தனித்துவமாக வளர்ச்சியடைந்த ஒன்றாகும். அவ்வளர்ச்சிக் கட்டங்களைக் குறிப்பிடுக. (6 புள்ளி)

The National e-learning Portal for The General Education

| மாகாணக் கல்வித் திணைக்களம் – வடமாகாணம் |
|---|
| க. பொ. த. (உயர்தர)ப் பரீட்சை – 2017 |
| நாடகமும் அரங்கியலும் - III |

| தரம் - 13 (2017) | 58 T III | செய்முறைப் பரீட்சை |
|---|---|---|

## வினாத்தாள் - I

A. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம்

நடிப்பு I

A.1. i) பாடுதல் வழியாக நடித்தல்

பின்வரும் பாடல்களைப் பாடி, நடித்துக் காட்டுக.

அ) சத்தியவான் :- மணிபுரம் விட்டோம்
பரிவிசை தொட்டோம்
வழிபல கடந்து விட்டோம்
வானோங்கி வளருமிப் பூங்கா
வனமதில் வந்துவிட்டோம்.......

(சத்தியவான் சாவித்திரி - இசை நாடகம்)

ஆ) மன்மதன் :- அலரிமலர் கணைதொடுப்பனடி
அடி ரதியே மானே ரதியே தேனே
சிவன் தபசை நான் அழிப்பனடி

ரதி :- அலரி மலர் கணை தொடுத்து
மன்னா மன்னா
சிவன் தபசை நீ அழிக்க
வேணா வேணா ................

(காமன் கூத்து)

அன்றேல் விரும்பிய இசை நாடகப் பாடல்கள் இரண்டை அன்றேல் கூத்துப் பாடல்கள் இரண்டைப் பாடி நடித்துக் காட்டுக.

அல்லது நீர் நன்கு அறிந்து வைத்துள்ள கூத்து / இசை நாடகப் பாடலொன்றைப் பயன்படுத்திச் சமகால முக்கியத்துவமுடைய பிரச்சினை ஒன்றைப் புதிதளிக்குக.

ii) ஆடுதல் வழியாக நடித்தல்

பின்வரும் பாத்திரங்களில் இரண்டினை ஆடி நடித்துக் காட்டுக.

| | | | |
|---|---|---|---|
| அ) | காத்தவராயன் கூத்து | - | காத்தான் / ஆரியப்பூமாலை |
| ஆ) | அலங்காரரூபன் | - | அலங்காரரூபன் / அலங்காரரூபி |
| இ) | இராவணேசன் | - | இராவணன் / மண்டோதரி |
| ஈ) | கோவலன் கூத்து | - | பாண்டி மகாராசன் / வஞ்சிப்பத்தன் |
| உ) | காமன் கூத்து | - | மன்மதன் / ரதி |

**கணிப்பீட்டு நியதி**

| | | |
|---|---|---|
| (1) பாடும் திறன் | - | 02 புள்ளிகள் |
| (2) பாத்திர வெளிப்பாடு | - | 03 புள்ளிகள் |
| (3) ஆடும் திறன் | - | 02 புள்ளிகள் |
| (4) முகபாவம் | - | 03 புள்ளிகள் |
| | | 10 புள்ளிகள் |

அன்றேல் யாதாயினும் ஒரு கூத்தாட்டத்தைப் பயன்படுத்திச் சமகால முக்கியத்துவம் உடைய பிரச்சினை ஒன்றை ஆடுதல் வழியாகச் சித்திரிக்குக.

நடிப்பு II

A.2. விதிக்கப்பட்ட பாடநூலிலிருந்து தன்னுரை (Solilogue) ஒன்றைத் தெரிந்தெடுத்து குறித்த பாத்திரத்தின் பண்புகள் வெளிப்படும் வகையில் அதனைச் சித்திரிக்குக.

**கணிப்பீட்டு நியதி**

| | | |
|---|---|---|
| (1) போலச் செய்தல் | - | 03 புள்ளிகள் |
| (2) பாத்திரச் சித்திரிப்பு | - | 03 புள்ளிகள் |
| (3) குரல் வெளிப்பாடு | - | 02 புள்ளிகள் |
| (4) புதிதளித்தல் | - | 02 புள்ளிகள் |
| | | 10 புள்ளிகள் |

நடிப்பு III

A.3. விதிக்கப்பெற்ற நாடக எழுத்துருக்களிலிருந்து பாத்திரத்தைத் தனியாகவும் கூட்டாகவும் சித்திரித்துக் காட்டுக.

i) அன்ரிகனி நாடகத்தில் வரும் காட்சி (தனி)

கிரயன் :- இல்லை, இல்லை
உன் செயலை யாருமே ஒப்பார்

அன்ரிகனி :- பயத்தாலே பேசவில்லை அன்னோர்

கிரயன் :- சீ பேதை! தனியன் நீ நாணமிலாய்

அன்ரிகனி :- நான் என் சகோதரனை மாட்சி செய்தேன்

கிரயன் :- அன்னோனுடனே இறந்த அவள் எதிரி உன் சோதரனா இலையா?

அன்ரிகனி :- இருவருமே சோதரர் தான்
என் சொந்தச் சோதரரே!

ii) ஒதெல்லோ நாடக எழுத்துருவிலிருந்து ஒரு காட்சி (கூட்டு)

இயாகோ :- அப்படியா நினைக்கிறீர்கள்?

ஒதெல்லோ :- அப்படி நினைப்பதா? இயாகோ!

இயாகோ :- என்ன? தனியிடத்தில் முத்தமிடுவதா?

ஒதெல்லோ :- அதிகாரபூர்வமில்லாத முத்தம்!

இயாகோ :- எந்தப் பாவமும் கருதாமல் தன் நண்பனோடு அவள் தன் படுக்கையில் ஆடையின்றி ஒரு மணி நேரத்திற்கு மேல்

ஒதெல்லோ :- ஆடையின்றிப் படுக்கையில் கிடப்பதா? இயாகோ! இதில் துரோகம் இல்லையா? இது சைத்தானையே ஏமாற்றுவதாகும். நேர்மையான நினைப்போடு அவர்கள் காரியம் செய்தாலும் சைத்தானைத் தூண்டிப் பாவகாரியம் செய்கிறார்கள். அதன் மூலம் கடவுளரின் கோபத்தைத் தூண்டுகிறார்கள்.

இயாகோ :- அவர்கள் எந்தப் பாவமும் செய்யவில்லை. இது ஒரு சிறு தவறுதான்! ஆனால் நான் என் மனைவிக்கு ஒரு கைக்குட்டை கொடுத்தால்.......

ஒதெல்லோ :- அதனால் என்ன?

**கணிப்பீட்டு நியதி**

| | | |
|---|---|---|
| (1) மெய்நிலை | - | 02 புள்ளிகள் |
| (2) குரல் | - | 02 புள்ளிகள் |
| (3) பாவம் | - | 02 புள்ளிகள் |
| (4) கருத்து | - | 02 புள்ளிகள் |
| (5) படைப்பாக்கம் | - | 02 புள்ளிகள் |
| | | 10 புள்ளிகள் |

நடிப்பு IV

A.4. சூழமைவுகளைப் புத்தாக்கம் செய்தல் (ஏதாயினும் இரண்டு)

அ) விபத்துக்குள்ளான தனது மகனை அதிதீவிர சிகிச்சைப் பிரிவிற்குக் கொண்டு செல்லும் தாய் / தந்தை.

ஆ) மொழி தெரியாத இடத்தில் (பரிச்சயமில்லாத மொழி) முகவரி விசாரிக்கும் நபர்.

இ) திருமண வைபவம் ஒன்றில் ஒளிப்பதிவு செய்பவரின் மேலாதிக்கம்.

**கணிப்பீட்டு நியதி**

| | | |
|---|---|---|
| (1) புத்தாக்கம் | - | 02 புள்ளிகள் |
| (2) கற்பனை | - | 02 புள்ளிகள் |
| (3) துணைக்கலைகளின் பயன்பாடு | - | 02 புள்ளிகள் |
| (4) பாத்திரச் சித்திரிப்பு | - | 02 புள்ளிகள் |
| (5) படைப்பாக்கத் திறன் | - | 02 புள்ளிகள் |
| | | 10 புள்ளிகள் |

B. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் - அரங்க நிர்மாணம்
(தயார்ப்படுத்தலுக்குப் பத்து நிமிடங்கள் வழங்கப்படும்)
யாதேனும் ஒரு பாத்திரத்திற்கு வேடப்புனைவு, ஆடை அணி செய்க.

| | | | |
|---|---|---|---|
| அ) | அன்ரிகனி | - | கிரயன். |
| ஆ) | ஒதெல்லோ | - | இயாகோ. |
| இ) | ஒரு பாவையின் வீடு | - | நோறா. |
| ஈ) | யூலியஸ் சீஸர் | - | மார்க் அன்ரனி. |
| உ) | அபசுரம் | - | பொதுவர். |
| ஊ) | அலங்காரரூபன் | - | அலங்காரரூபி. |
| எ) | திருக்குற்றாலக் குறவஞ்சி | - | சிங்கி. |
| ஏ) | சாகுந்தலம் | - | விதூஷகன். |

**கணிப்பீட்டு நியதி**

| | | |
|---|---|---|
| (1) வேடஉடையின் பொருத்தப்பாடு | - | 10 புள்ளிகள் |
| (2) ஒப்பனையின் பொருத்தப்பாடு | - | 10 புள்ளிகள் |
| (3) முழு ஒத்த தன்மை | - | 10 புள்ளிகள் |
| | | 30 புள்ளிகள் |

C. i) கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் - நெறியாள்கை

குழுநிலைப்பட்ட செயற்பாடாகப் பரீட்சகர் கூறும் விடயப் பொருளை அடிப்படையாகக் கொண்டு 5 நிமிடத்திற்குரிய நாடகம் ஒன்றைத் தயாரித்து ஆற்றுகை செய்க.

அன்றேல்

பின்வருவனவற்றுள் ஏதேனுமொரு விடயப் பொருளைத் தெரிவுசெய்து, சமூக விழிப்புணர்வைத் தூண்டும் விதத்திலான தெருவெளி ஆற்றுகை ஒன்றை நிகழ்த்திக் காட்டுக.

அ) போதையற்ற நாடு.

ஆ) மரம் வளர்ப்போம்.

இ) முதியோரைப் பேணுவோம்.

ii) கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் - நெறியாள்கை (வாய்மொழி மூலப் பரீட்சை)

அ) நாடக நெறியாளரின் பிரதான பணிகள் யாவை? (7 புள்ளி)

ஆ) நியம அரங்கத் தயாரிப்பில் நெறியாளர் மேற்கொள்ளும் நடிகர் தெரிவு முறைகள் யாவை? (6 புள்ளி)

இ) நாடகமொன்றுக்கு ஒளிவிதானிப்புச் செய்யும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் யாவை? (7 புள்ளி)

**கணிப்பீட்டு நியதி**

| | | |
|---|---|---|
| (1) நெறியாள்கைத் திறன் | - | 05 புள்ளிகள் |
| (2) தயாரிப்புத் திறன் | - | 05 புள்ளிகள் |
| (3) வாய்மொழி மூலப் பரீட்சை | - | 20 புள்ளிகள் |
| | | 30 புள்ளிகள் |